# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.15/2021

DW2–திருஞானம் நாள்.24.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரதிவாதி என்னுடைய உடன்பிறந்த தங்கை ஆவார். என்மனைவி பெயர் அமுதா. நான், பிரதிவாதி மற்றும் என்மனைவி அனைவரும் ஒரே வீட்டில் தான் குடியிருக்கிறோம். பிரதிவாதிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதி பெயருக்கு வந்த அழைப்பாணையை என்மனைவி கையெழுத்து செய்து வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ளது என்னுடைய கையெழுத்து என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து அல்ல. வீரம்மாள் என்பவர் பிரதிவாதி மீது தாக்கல் செய்த வழக்கில் நான் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் சாட்சிகள் விவரத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து அல்ல. பிரதிவாதி தாவா சொத்தை 4கோடியே 10லட்சத்திற்கு கிரயம் கொடுக்க ஒப்புக்கொண்டு ரூ.15லட்சம் முன்பணமாக பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.6 கிரய ஒப்பந்தம் வாதிக்கு ஆதரவாக எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த கிரயஒப்பந்தத்தில் நான் முதல் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பத்தை நான் பார்த்துள்ளேன். அவர் நெடுவாசல் என்ற ஊரை சேர்ந்தவர். வீரம்மாளுக்கும் பிரதிவாதிக்கும் வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அகிலாண்டேஸ்வரிக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த வழக்கை என் சகோதரி நீதிமன்றத்தில் நடத்துவதற்கு நான் நீதிமன்றத்திற்கு வரபோக உதவியாக இருந்தேன் என்றால்

எப்போதாவது வருவேன், போவேன். அந்த வழக்கில் நெடுவாசலை சேர்ந்த சம்பத் அகிலாண்டேஸ்வரி தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா கிரய ஒப்பந்தத்தை பிரதிவாதி தான் எழுதிகொடுத்ததார் என்றும் அதிலுள்ளது பிரதிவாதியின் கையெழுத்து என்றும், நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றும், தற்போது வாதியை மோசடி செய்ய பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் தான் நீதிமன்றத்தில் செய்த கையெழுத்தை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தை வாதிபெயருக்கு கிரயம் செய்து கொடுக்க பிரதிவாதி சட்டப்படி கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.